# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2035/18 - 2017 සැප්තැම්බර් 06 වැනි බදාදා - 2017.09.06

***2035/18 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், திருகோணமலை நகர சபை பிரிவில், திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கட்டுக்குளம்பற்று சிறு பிரிவில், திருக்கடலூர் - 243 எப் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை மா அதிபரால் அளந்து தயாரிக்கப்பட்ட, திரு/ரீடபிள்யூஜீ/2015/316 ஆம் இலக்க 2016.03.31 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட 3.9354 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித் துண்டுக்கான எல்லைகள்:

*01.* **துண்டு 'ஏ' - பாடசாலை வளவு - விஸ்தீரணம் : 3.9354 ஹெக்டயார்**

வடக்கு : பிள்ளையார் கோவில் காணி மற்றும் கடற்கரை ; கிழக்கு : கடற்கரை, பாடசாலை வளவு மற்றும் பாதை ; தெற்கு: பாடசாலை வளவு மற்றும் வடக்குக் கடற்கரை வீதி ; மேற்கு : வடக்குக் கடற்கரை வீதி மற்றும் பிள்ளையார் கோவில் காணி.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இலக்கம் : 4-3/15/2014/வீஈ/169.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2017, யூன் 12.

09-505